# வெலிகம பிரதேச சபை

# மாத்தறை மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 24 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 27 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 19 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

----------------------------------------------

இவ்வறிக்கையின் பந்தி 1.3 இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கல்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான வெலிகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துக்கள்

----------------------------------------------------------------

1.3.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

------------------------------------------------------------------------------------------------------

(அ) 2010 ஜனவரி 19 திகதிய இலக்கம் PED/54 கொண்ட அரச தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் 2011 ஜனவரி 01 திகதி முதல் உள்ளூராட்சி நிறுவனங்கள் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுகளை தயாரிக்க வேண்டும். எனினும் அந் நியமங்களை கடைபிடித்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கபபட்டன.

(அ) மீளாய்வாண்டு தொடர்பாக ரூபா 369,169 இற்கான மூலதனச் செலவுகள், மீண்டுவரும் செலவுகள் என ஆண்டிற்கான வருமானத்திற்கு எதிரே பதிவளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) நூற்றிற்கு 10 தடுத்து வைத்தல் கணக்கில் காணப்பட்ட ரூபா 2,359,365 இற்கான வரவு மீதி பொறுப்புக்களில் இருந்து கழித்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(இ) முன்னைய ஆண்டிற்கான வீதி விளக்கு மீளளிப்புத் தொகையாக சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 63,310 தொடர்பாக கடன்பட்டோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது நன்கொடைகள் என பணமாக பெற்றுக்கொள்ளப்படாத நூலகப் புத்தகங்கள் மற்றும் மின் பிறப்பாக்கியின் பெறுமதி ரூபா 115,813 சொத்துக்கள் கணக்கு வரவு வைத்து மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் அப் பெறுமதி பணம் கிடைத்தல் மற்றும் செலவுகள் எனவும் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 04 கணக்கு விடயங்கள் தொடர்பான பெறுமதி ரூபா 7,742,478 ஆக காணப்பட்டதுடன் துணைப்பதிவேடுகளின் பிரகாரம் அக் கணக்குகளின் பெறுமதி ரூபா 3,491,884 ஆகக் காணப்பட்டமையால் வித்தியாசம் ரூபா 4,250,594 ஆகும்.

1.3.4 தொங்கல் கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள தொங்கல் கணக்கின் செலவு மீதி ரூபா 65,791 இனை தீர்த்திருக்கவில்லை.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

நிதிக் கூற்றுக்களில் காணப்பட்டுள்ள ரூபா 123,652,755 பெறுமதியான 4 சொத்து மீதிகள் மற்றும் ரூபா 27,649,776 பெறுமதியான பொறுப்பு மீதி ஒன்று தொடர்பாக சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.9 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| | விதி 217-218 | சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் வருடாந்த கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2002 நவம்பர் 28 திகதிய இலக்கம் 2002/02 கொண்ட திறைசேரி சுற்று நிருபம் | கணனி துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 20,051,774 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 50,909,519 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

-------------------------------

2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு தொடர்பாக தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீதவரி | 7,421 | 998 | 749 |
| வாடகை | 5,144 | 193 | 139 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,637 | 1,705 | 92 |

2.2.2 வீதவரி

-------------

2013 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த வீதவரி ரூபா 1,060,880 தொகையும் ஆண்டிற்கான பில்போடப்பட்டிருந்த ரூபா 270,433 உடன் கிடைக்க வேண்டிய தொகையின் கூட்டுத்தொகை ரூபா 1,331,313 ஆகும். இத் தொகையில் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்ட தொகை ரூபா 277,221 ஆகக் காணப்பட்டதுடன் அறவீடுகளின் முன்னேற்றம் நூற்றிற்கு 20 அளவான சிறு பெறுமதியை கொண்டுள்ளது. இது தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158(1)(ஆ) பிரிவின் பிரகாரம் வருமானம் சேகரிக்கும் அதிகாரம் பெற்றவரான சபையின் செயலாளர் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

2.2.3 வாடகை

------------

2013 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவையாக உள்ள வாடகை ரூபா 30,645 தொகையும் ஆண்டிற்கான பில்போட்டவைகள் ரூபா 301,800 உடன் கிடைக்க வேண்டிய தொகையின் கூட்டுத்தொகை ரூபா 332,445 ஆகும். இத் தொகையில ஆண்டின் போது ரூபா 11,270 தொகையே அறவிடப்பட்டிருந்தது. அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 3 ஆகிய சிறு பெறுமதியை கொண்டிருந்தது.

2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

----------------------------------------------------------------------------------------

மாகாண பிரதான செயலாளரிடம் மற்றும ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,210,961 ஆகும்.

2.2.5 வெலிகம, மிதிகம துருக்கி கிராம கடைகளை வாடகைக்கு கொடுத்தல்

-------------------------------------------------------------------------------------------------------

வெலிகம பிரதேச செயலாளரினால் இந்த கடைகளில் உரிமையை பிரதேச சபைக்கு சாட்டப்பட்டிருந்தது. 2006 நவம்பர் 25 திகதி இந்த தொடர் கட்டிடத்தின் மேல் மாடியில் 10 கடைகளும் மற்றும் தரை மாடியில் 11 கடைகளும் வாடகைக்கு கொடுப்பதற்கான கேள்விகள் அழைக்கப்பட்டிருந்தது.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 09 மற்றும் 10 இலக்கங்களை் கொண்ட கடைகளின் உரிமையாளர்களிடம் ஒரே முறையில் பெறப்படும் வாடகைத் தொகை ஆகிய ரூபா 100,000 வீதம் நிலுவையாகக் காணப்பட்டது.

(ஆ) இந்த கடைகளுக்காக பில்போடப்பட்டிருக்கவில்லை. பில்போடப்படாமையால் கடந்த 07 வருடங்கக்காக ரூபா 1,296,000 தொகையொன்று சபை இழக்க நேரிட்டிருந்தது.

(இ) கடை உரிமையார் இந்த கடைகளை பெற்றிருந்த போதும் அவற்றில் வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கவில்லை. எனினும் இந்த கடைகளுக்காக சபையின் பேரில் மின்சாரம் பெறப்பட்டிருந்தது. எனவே 10 கடைகக்காகவும் ரூபா 63,012 தொகையொன்று மின் கட்டணமாக மின்சார சபைக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் மேலும் ரூபா 1,622,743 தொகையொன்று மின்சார சபைக்கு செலுத்தவேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

------------------------------------------------

(அ) 2013 ஆண்டின் போது வீதி விளக்குகள் பராமரிப்பு மற்றும் ஏனைய செலவுகளுக்காக ரூபா 1,687,374 தொகையொன்று செலவிடப்பட்டுள்ளது. மாத்தறை மின் பொறியியளாலரிடம் ரூபா 19,296 தொகை மீளளிப்புச் செய்யப்பட்டுள்ளமையால் ரூபா 1,668,078 இற்கான பெறுமதியொன்று சபை நிதியத்தில் செலவு பொறுப்பொன்றாகியுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி ஆணையாளரிடம் பதவியணிச் சம்பளம் மந்திரிமார் படி ஆக ரூபா 11,458,900 மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. ஆண்டின் போது சம்பளங்கள் மற்றும் படி ஆக ரூபா 12,936,597 தொகையொன்று செலவிடப்பட்டுள்ளது. சபை நிதியத்திற்கு ரூபா 1,477,697 தொகையென மேலதிக செலவு பொறுப்பாகியுள்ளது.

4. கணக்கீட்டுத் தன்மையும் நல்லாட்சியும்

------------------------------------------------------------

பாதீட்டுக் கட்டுப்பாடு

----------------------------------

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பீடு வருமானம் மற்றும் செலவுகள் ஆண்டிற்கான உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் ஒப்பீடு செய்யும் போது முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு பயன்தரு நிதிக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

--------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்